# ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2024.06.18 |

## இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2024 மே


**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2024 மேயில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் ஆகிய இரண்டிலும் முன்னேற்றங்களை எடுத்துக்காட்டுகின்றன.**

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2024 மேயில் 58.2 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, தயாரிப்பு நடவடிக்கைகளில் விரிவாக்கமொன்றைப் எடுத்துக்காட்டியது.** தொழில்நிலை தவிர அனைத்து துணைச் சுட்டெண்களும் மாத காலப்பகுதியில், நடுநிலையான எல்லைக்கு மேலே உயர்வடைந்து, சுட்டெண் பெறுமதியில் ஒட்டுமொத்த அதிகரிப்பொன்றை விளைவித்தன.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி துணைச் சுட்டெண்களின் அதிகரிப்புக்களுக்கு, உணவு மற்றும் குடிபான துறையின் தயாரிப்பு பிரதான காரணமாக அமைந்தன. உற்பத்தி நடவடிக்கைகளின் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பிற்கு முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில், மே மாதத்தில் நிலவிய அதிகளவிலான தொழில் நாட்கள் காரணமாக அமைந்தன என பெரும்பாலான பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். மேலும், புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கமைவாக, கொள்வனவுகளின் இருப்பு மாதகாலப்பகுதியில் கணிசமாக அதிகரித்தது. அதேவேளை, நிரம்பலர் விநியோக நேரம் மேயில் மேலும் நீட்சியடைந்தது.

**தயாரிப்பு கொ.மு.சு 58.2**
2024 மே

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***கொமுசு - தயாரிப்பு அளவீட்டுத் தொகுப்பு***

| மாறி | ஏப். | மே | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **42.0** | **58.2** | **+** | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது** |
| புதிய கட்டளைகள் | 40.5 | 57.5 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| உற்பத்தி | 31.5 | 62.5 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில்நிலை | 46.5 | 49.0 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 38.5 | 60.8 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 59.1 | 62.8 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கேள்வியில் படிப்படியான அதிகரிப்பினை எதிர்பார்த்து, அடுத்த மூன்று மாதங்களுக்கான தொழிற்துறை எதிர்பார்க்கைகள் சாதகமாகக் காணப்படுகின்றன. எனினும், உலகளாவிய கப்பற் துறையில் கொள்கலனின் கிடைப்பனவுடன் தொடர்புடைய தற்போதைய பிரச்சனைகள் தொடர்பில் பல்வேறு பதிலிறுப்பாளர்கள் அவதானத்துடன் இருக்கின்றனர்.

### உலகளாவிய தோற்றப்பாடு:

கொமுசு தயாரிப்புத் தொகுப்பு

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| **உலகம்** | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| **இந்தியா** | சீர்குலைவிலிருந்து மேம்பட்டுள்ளது |
| **சீனா** | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| **ஐக்கிய அமெரிக்கா** | மேம்பாட்டிலிருந்து நடுநிலை |
| **ஐக்கிய இராச்சியம்** | சீர்குலைவிலிருந்து மேம்பட்டுள்ளது |
| **யூரோ வலயம்** | சீர்குலைந்துள்ளது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2024 யூன் 18 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொ.மு.சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 55.0 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்த வியாபார நடவடிக்கைச் சுட்டெண் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு 2024 மேயில் பணிகள் நடவடிக்கைகளில் மெதுவான விரிவடைதலை எடுத்துக்காட்டியது.**

பல துறைகளுக்கிடையில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகள் மூலம் வியாபார நடவடிக்கைகளில் விரிவடைதல் தூண்டப்பட்டிருந்தது. அதற்கமைய, சந்தை வட்டி வீதங்களில் குறைப்பிற்கமைவாக, நிதியியல் பணிகளின் தொழில் நடவடிக்கைகள் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தன. மேலும், போக்குவரத்து பணிகளின் தொழில் நடவடிக்கைகள் கணிசமான வளர்ச்சியொன்றைப் அனுபவித்த அதேவேளை, தொலைத்தொடர்பூட்டல், உண்மைச் சொத்து, சுகாதாரம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் போன்றனவும் மாதகாலப்பகுதியில் சாதகமான அபிவிருத்திகளைப் பதிவுசெய்தன. எவ்வாறிருப்பினும், சுற்றுலாப் பயணிகள் வருகைகளில் வீழ்ச்சிக்கிசைவாக தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம் ஆகிய தொழில் நடவடிக்கைகள் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் மாதகாலப்பகுதியில் மேலும் வீழ்ச்சியடைந்தன. மேலும், மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத்துடன் தொடர்புடைய தொழில் நடவடிக்கைகளும் பருவகால இறுதியில் வீழ்ச்சியடைந்தன.

புதிய வியாபாரங்கள், குறிப்பாக நிதியியல் பணிகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களின் மூலம் மேயில் அதிகரித்தன.

பல கம்பனிகளாலும் மேற்கொள்ளப்பட்ட சில புதிய ஆட்சேர்ப்புக்களுக்கு மத்தியில் தொழில்நிலை மேயில் அதிகரித்தது. அதேவேளை, நிலுவையிலுள்ள பணிகள் மாத காலப்பகுதியில் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தன.

***கொமுசு - பணிகள் அளவீட்டுத் தொகுப்பு***


| மாறி | ஏப். | மே | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **56.7** | **55.0** | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| புதிய வியாபாரங்கள் | 56.2 | 52.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 42.8 | 52.0 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| நிலுவையிலுள்ள பணி | 49.4 | 45.7 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 67.5 | 70.2 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் சாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மூலம் ஆதரவளிக்கப்பட்டு, உயர்வான வீதத்திலேனும் தொடர்ந்தும் மேம்பட்டன.

**பணிகள்**
**கொ.மு.சு**
**(வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)**
**2024 மே**
**55.0**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | மேம்பட்டுள்ளது, மெதுவான வீதத்தில் |
| சீனா | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | மேம்பட்டுள்ளது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | மேம்பட்டுள்ளது, மெதுவான வீதத்தில் |
| யூரோ வலயம் | மேம்பட்டுள்ளது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்', 2024 யூன் 18 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.
பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.